புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
ISSN: 2456-821X

# கிறித்தவச்சிற்றிலக்கியமும் பண்பாட்டு வெளிப்பாடுகளும்

த. ஜெயசீலி,
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் – 635 601. திருப்பத்தூர் மாவட்டம்.

ஆய்வுச்சுருக்கம்

பைந்தமிழ், கன்னித்தமிழ், என்றுமுள தென்தமிழ், சங்கத்தமிழ் என்று பல்வகையில் போற்றப்படுவது செந்தமிழாம் தமிழ்மொழி. அதன் தோற்றத்தை வரையறுக்கமுடியாத அளவுக்கு மிகப்பழமையான மொழியின் பண்பாடு, சிறப்பு, மக்களின் வாழ்வியல் மதிப்பீடுகள், உணர்வுகள், வழிபாடு மற்றும் சமூகவாழ்வு ஆகியனவற்றை இலக்கியங்களில் கொண்டுவர பெரும்பங்களிப்பு தந்தவர்கள் மேனாட்டு கிறித்தவர்கள். இறைவனின் அன்பை உலகிற்கு காட்ட மனித உருவம் கொண்ட இயேசுபெருமானை பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு, அவரது வாழ்வியல் அறங்களையும், பண்பு நலன்களையும் சிற்றிலக்கியங்கள் வடிவங்களான பள்ளு, உலா, அம்மானை, தூது, பதிகம், மாலை, கலம்பகம், அந்தாதி, குறவஞ்சி, நொண்டி நாடகம் மற்றும் கீர்த்தனைகள் ஆகியவற்றின் மூலம் சிறப்பும், நயமும் மிக்க கிறித்தவச்சிற்றிலக்கியங்களை படைத்துள்ளனர். இதன் வழியே தமிழ்மொழி, தமிழ்இனம் தமிழ் பண்பாடு என உலகறியச்செய்தவர்கள் தமிழ்ப்புலவர்கள்.

முன்னுரை

அனைத்து உயிர்களும் தோன்றி, வாழ்ந்து, மறையும் வரையில் அவைகளைப்பஞ்சபூதங்கள் ஆட்கொள்கின்றன. இவற்றிற்கு எல்லாம் மனிதனை அதன் சிகரமாக படைத்து, பாதுகாக்கும் கடமை மனிதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தனக்கும் உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருளுக்கும் ஒரு தொடர்பையும், இணக்கத்தையும் கொண்டு சிறந்த வாழ்வினைக் கொண்டவர்கள் நம்முன்னோர்கள் என்பது சிறப்பு. கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் மண்ணின் பண்பாட்டு சிதையாமல் இப்பண்பாட்டுக் கூறுகளையும், கிறித்தவச் சிந்தனைகளையும், சமுதாயச் சிந்தனைகளையும் எடுத்தியம்புவதை கீழ்க்காணும் தலைப்புகளில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. அன்பு வாழ்வு
   - நிபந்தனையற்ற அன்பு

2. அறவாழ்வு
   - பசி, பிணிப்போக்குதல்
   - பொதுநலம் பேணுதல்

3. அருள் வாழ்வு
   - உயிர்களை நேசித்தல்

அன்பு வாழ்வு

தமிழர்களின் குடும்பவாழ்வு அன்பினை மையமாகக் கொண்டு ஒரு அழகிய கட்டமைப்புக்கொண்டுள்ளது. அன்பினால் தியாகம், பகிர்வு, மன்னிப்பு, விட்டுக்கொடுத்தல், பிறர் நலம் விரும்புதல் போன்ற பண்புகளைக் கொண்டு விளங்கினர். இதனையே,

''அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரந்தளிர்த்தற்று''

- (திருக்குறள். 78. ப.104)

அன்பு அகத்திலே இல்லாத வாழ்வு, பாலை நிலத்தில் பட்டுப்போன மரம் தளிர்த்தது போன்றதாகும் என்று வள்ளுவர் அன்பினை வலியுறுத்துகிறார். நிபந்தனையற்ற அன்பு கிறித்தவச்சிற்றிலக்கியங்கள் இறைவனின் அன்பை பெரிதும் வெளிப்படுத்துகின்றன. நிபந்தனையற்ற அன்பிற்கு இயேசுபெருமான் ஊதாரி மகன் உவமையை குறிப்பிடுகின்றார்.தந்தை தன்னைப்பிரிந்து சென்று, செல்வத்தை எல்லாம் இழந்த ஊதாரி மகனை, தயக்கமின்றி தனது வாரிசாக ஏற்றுக்கொள்கின்றார். இதனையே,

''ஆடை அணிகலன் அழகிய மிதியடி
அனைத்தும் கொணர்க, இவனுக்கு அணிக:
கோடைத்தென்றல் இன்பம் எனவே
கொள்வோம் விருந்து இன்னும் தினமே.
வாணாள் இழந்த என் மகன் மீண்டும்
உயிரைப் பெற்றான் உவகை தந்தான்
காணா இடமே சென்றான், மீண்டும்
கண்டேன் இவனை, கொண்டேன் உயிரை''

- [புதிய பெத்லகேம் குறவஞ்சி. ப.43.பா.10]

என ஊதாரி மகனுக்கு அணிகலன்கள் பூட்டி, மோதிரம் அணிவித்து, பட்டு ஆடைகள் உடுத்தி, இழந்த உயிரை மீண்டும் கண்டது போல் தந்தை மகிழ்வதைக்குறிப்பிடுவதன் மூலம் அன்பின் வழியது உலகம்; இறைவன் அன்பே வடிவானவன்; மனித உயிர்கள் அன்பு செலுத்தத்தவறினால் ஆறறிவு கொண்டதற்குப்பொருள் இல்லாமல் போகும் என்கிறது புதிய பெத்லகேம் குறவஞ்சி என்னும் சிற்றிலக்கியம்.

அறவாழ்வு

தமிழரின் வாழ்வியல் கருவூலமான புறநானூறு வீரத்தையும், ஈரத்தையும் மட்டும் பேசாமல், வாழ்வின் விழுமியங்களையும் பேசுகிறது. பிறர்க்கென வாழ்வதே பிறவிப்பயன் என்ற கருத்தினை விளக்கும் இப்பாடல் தனக்கென வாழா மனிதர்களைப்பற்றிப் பேசுகிறது. இதனையே,

''உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும்,இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்:
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே''  - [புறநானூறு.பா. 182]

எனப்பாடி தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள். இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அஃது உயிர்க்காப்பது என்பதற்காகத் தனித்து உண்ண மாட்டார்கள்; யாரையும் வெறுக்க மாட்டார்கள்; சோம்பலின்றிச் செயல்படுவார்கள்; பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்; புகழ்வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள்; உலகம் முழுவதும் கிடைப்பதாயிருந்தாலும் பழிவரும் செயல்களைச்செய்யார்; எதற்கும் மனம் தளர மாட்டார்கள். இத்தகைய சிறப்புடையோர் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக்கொண்டிருக்கிறது என்று பாடுகிறான் பாண்டிய மன்னன் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி.

*பசி, பிணிப்போக்குதல்*

*தமிழர்களின் அறவாழ்வினை கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. இறைவன் உறையும் இல்லம் எளியவர்களும், வறியவர்களும் என்று இறையாட்சியில் முக்கியத்துவம் தந்தவர் இயேசுபெருமான். இயேசுபெருமானுக்கு முன்னோடியாக பல்வேறு இறைவாக்கினர்கள் அறவாழ்வினை வலியுறுத்தினர். இதனையே,*

*''ஏழைகள் பக்கமே இறைவன் இருப்பதை*
*எடுத்துச் சொன்னார் ஆமோசு*
*வேளையில் உதவாச்சொத்து இருப்புகள்*
*வீண் ஆம் என்றே கும்மியடி''*

*- (அருள்மொழிக்கும்மி .ப.24.பா.48)*

*என்று பாடுவதன் மூலம் ஏழை எள்ளியவர்களுக்கு, உரியபொருளையும், செல்வத்தினையும் கவர்ந்துக்கொள்ளாமல் நீதியுடனும், அறத்துடனும் செயல்பட அறிவுறுத்துகின்றார் இறைவாக்கினர் ஆமோசு.*

*பொதுநலம் பேணுதல்*

*'தான்' 'தனது' என்ற சுயநலத்தை விடுத்து அனைவரும் நலம், வளம் பெறவேண்டும் என்ற உணர்வினை இறைவாக்கினர் .யோனா மூலம் இறைவன் உணர்த்துகின்றார். இதனையே,*

*''போனாப்போகட்டும் என்று விடாமல்*
*நினிவே மக்களைக்காத்திட*
*யோனாவை ஆகட்டும் என்று கூறிடச்*
*செய்தார் கடவுள் கும்மியடி!''*

*- (அருள்மொழிக்கும்மி. ப.25.பா.49)*

*இறைவனின் தண்டனைக்கு ஆளாகி, அழியப்போகும் நினிவே மக்களைப்பார்ப்பதில் ஆர்வமாக இருந்த இறைவாக்கினர் யோனாவை இறைவன் கடிந்துகொள்ளுகிறார். மேலும் குற்றங்களுக்கு தண்டனை தரப் போவதாக கூறியிருந்தாலும், மக்களின் மனமாற்றத்தைக்கண்டு தனது மனதை மாற்றிக்கொண்டு, நலமான வாழ்வை தரக்கூடியவர் இறைவன் என்பதை வெளிப்படுத்துவதாக ஆசிரியர் மணிவளன் கூறுகிறார்.*

*அருள் வாழ்வு*

*அன்பு என்னும் நிலையிலிருந்து அருள் நிலைக்கு உயர்ந்து வாழ்ந்த இனம் தமிழினம். ஆதிசங்கரர், இராமானுஜம் , வள்ளலார், மகாத்மா காந்தி, பாரதியார் போன்றோர் அருள் உள்ளத்துடன் வாழ்ந்ததை இலக்கியங்கள் இயம்புகின்றன. இதனையே,*

*''அருள் என்னும் அன்புஈன் குழவி பொருள் என்னும்*
*செல்வச் செவிலியால் உண்டு''* *- (திருக்குறள்.757)*

*The child mercy which is borne by love grows under the care of the rich nurse of wealth. - (திருக்குறள். பெரியண்ணன் உரை. ப.445)*

*உயிர்களை நேசித்தல்*

*தனக்குத்துன்பம் வருகிறது என்றால் யாரைப்பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவது மனித உள்ளம். தனக்குத்துன்பம் அடுக்கடுக்காய் நிகழுகின்றபோதும் ஆவிபிரிகின்ற நிலையிலும் தமது துன்பத்தினைப் பற்றிக்கவலைப்படாமல், துன்புறுத்துபவர்களை மன்னிக்கும் அருள் உள்ளம் கொண்டவராக இயேசுபெருமான் காட்சியளிக்கின்றார். இதனையே,*

*''பாசம் என உன்னலிர் பிணித்தமை பகைத்த*
*நீசமனு மக்களை நினைந்து உருகும் அன்பின்*
*நேசம் எனும் வல்லியதை நீக்க வசம் இன்றி*
*ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்''*

*- (இரட்சணிய யாத்திரிகம். பா. 1421)*

*எனப்பாடுவதன் மூலம் இறைமகன் தன்னைப் பிறர் கயிற்றால் கட்டும்போது அதற்கு உடன்பட்டு நின்றார்; இயல்பாக மனிதர்களிடம் காணப்படுகிற சாதாரண அன்புச்செயல் என்று கருத வேண்டியதில்லை. தம்மீது பகை கொண்டு தனக்கு இழிவான செயல்களைச்செய்த இம்மனிதர்கள் தாங்கள் வாழும் காலம் முழுவதும் துன்பத்தில் இருப்பார்கள் என்று எண்ணி*

*அவர்களுக்காக இரக்கப்படுகிற தன்மைதான் காரணம்; அந்த அன்பு என்னும் கட்டிலிருந்து விடுபட முடியாமல், எந்த உதவியும் பெறமுடியாத ஓர் ஏழையைப் போல அமைதியுடன் நின்றார் என்று இயேசு கிறிஸ்துவின் அருள் உள்ளத்தை சுட்டிக்காட்டுகிறார் ஆசிரியர் எச்.ஏ.கிருட்டிணனார்.*

*முடிவுரை*

*கிறித்தவ இலக்கியங்கள் பண்பாட்டையும், நாகரீகத்தையும் அள்ளித்தரும் அரிய களஞ்சியங்களாக திகழ்கின்றன. பண்டைத்தமிழர்களின் வாழ்க்கைமுறைகள் குறித்து தகவல்களை நாம் அறிந்து கொள்ளச்செய்வதோடு மக்கள் வாழவேண்டிய நெறிமுறைகளை அறிவுறுத்துவனாகவும் அமைகின்றன. இயேசுவின் வருகையானது சமுதாயம் இருளின் ஆட்சியிலிருந்து விடுதலைப்பெற்று இறையாட்சியின் முக்கியக்கூறுகளான அன்பு, சகோதரத்துவம், சமத்துவம், ஒற்றுமை மேலும் இறைவன் ஒருவரே, அனைவரும் அவரது பிள்ளைகள் என்ற குடும்ப உணர்வினை அளிப்பதாக அமைகின்றது. கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் வெளிப்படுத்தும் இத்தகைய பண்பாட்டினை நமது அடையாளமாக மாற்றத்தூண்டுவதாக அமைகிறது இவ்வாய்வுக்கட்டுரை.*

*துணைநின்ற நூல்கள்*


1. *முனைவர். கோ. பெரியண்ணன், திருக்குறள், வணிதா பதிப்பகம், எண்:11, நானாதெரு, தி.நகர், சென்னை -17.*
2. *முனைவர்சி. மணிவளன், புதியபெத்லகேம் குறவஞ்சி, தென்பொதிகைத்தமிழ் சங்கம், 86, மேலரத வீதி, எட்டையபுரம் - 628902, தூத்துக்குடி மாவட்டம், முதற்பதிப்பு: 2012.*
3. *பேராசிரியர். எஸ். வையாபுரிப்பிள்ளை, சங்க இலக்கியம் புறநானூறு, பாரிநிலையம் 59, பிராட்வே, சென்னை - 1.*
4. *முனைவர்.சி.மணிவளன், அருள்மொழிக்கும்மி, கிறித்த ஆய்வுமையம், தூயவளனார் தன்னாட்சிக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620002, முதற்பதிப்பு: பிப்ரவரி, 2017.*
5. *எச்.ஏ.கிருட்டிண னார், பொதுப்பதிப்பாசிரியர், ஜி.ஜான் சாமுவேல், ஆசியவியல் நிறுவனம், சென்னை, இந்தியா, முதற்பதிப்பு: 1998.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********